
# உடன்பிறப்பே... 90

**நீரை.மகேந்திரன்**

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த 'ஆம்பூர்' ஆர்.சம்பங்கி அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

ஓவியம் : ரவி பேலட்



# மனம் மாறா 'ஆம்பூர்' ஆர்.சம்பங்கி

*1962*-ஆம் ஆண்டு கழகம் நடத்திய, 'விலைவாசி உயர்வுப் போராட்டம்'. பேரறிஞர் அண்ணா உள்பட கழக முன்னணியினர் பலரும் கைது செய்யப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். அண்ணாவிடம் அரசியல் கற்றுக்கொள்ள தம்பிகளுக்குக் கிடைக்கும் அரிய வாய்ப்பு, சிறைச்சாலை வகுப்புகள். ஆனால், அங்கு சுவையான சம்பவங்களுக்கும் குறைவிருக்காது. அப்படித்தான், ஒருநாள் சிறைக் கைதிகளுக்கு வெளியில் இருந்து பிரியாணி வந்துள்ளது. அந்தத் தகவலை அண்ணாவிடம் சொல்வதற்காக மகிழ்ச்சியுடன் சென்றுள்ளார் இளஞ்செழியன் என்கிற தொண்டர்.

வழியில், அவரைப் பார்த்த மற்றொரு தொண்டர், என்ன விவரம் எனக் கேட்டு, 'சிக்கன் பிரியாணி வந்துள்ளது' என்று அண்ணாவிடம் சொல்லாதே, 'கிச்சன் பிரியாணி வந்துள்ளது என்று சொன்னால் மகிழ்வார்' எனக் கூறி அனுப்பியிருக்கிறார். அதைக்கேட்டு, இளஞ்செழியனும் அண்ணாவிடம் சென்று, 'இன்று கிச்சன் பிரியாணி அண்ணா' என்று கூறியுள்ளார்.

அண்ணா சிரித்துக்கொண்டே "எல்லா பிரியாணியும் கிச்சன் பிரியாணிதான். நீ இங்கே வரும்போது சம்பங்கியைப் பார்த்து விட்டு வந்தாயா?" எனக் கேட்டாராம். அப்படியான குறும்புத் தம்பி, நகைச்சுவைத் தொண்டர், கழக முன்னோடி 'ஆம்பூர்' சம்பங்கி. ஆனால், கொள்கை வார்ப்பில் சமரசமற்ற போராளி என்பார், பேரறிஞர் அண்ணா.

முத்தமிழறிஞர் கலைஞருக்கு 1950-ஆம் ஆண்டு முதல் நெருங்கிய நண்பர். "சிரித்த முகம்- குறு குறுப்பான பார்வை- குளிர்ச்சி நிறைந்த பேச்சு- தலைதாழா தன்மான உணர்வு இத்தனைக்கும் சொந்தக்காரர் ஆம்பூர் சம்பங்கி" என 'நெஞ்சுக்கு நீதி'யில் இருவருக்குமான நட்புறவைப் பதிவு செய்திருக்கிறார் கலைஞர்.

## லட்சியத்தில் நம்பிக்கை

1963-இல் 'சட்ட நகல் எரிப்புப் போராட்ட' சிறை அனுபவத்தை 'கைதி எண்-6342' என 'காஞ்சி' இதழில் தொடராக எழுதினார் பேரறிஞர் அண்ணா. அதில் ஆம்பூர் சம்பங்கியைப் பற்றி பதிவு செய்கையில், "ஆம்பூர் சம்பங்கி, மிக அமைதியாகக் காரியத்தைக் கணக்கிட்டு முடிக்கும் இயல்பினர். விலைவாசிக் குறைப்புப் போராட்டம் காரணமாக, என்னோடு வேலூர் சிறையில் இருந்தவர். அப்போதே, அவர் ஆம்பூர் நகராட்சித் தலைவராக வரவேண்டும் என்று பேசிக்கொண்டோம். எண்ணியபடியே நடந்தேறியது" என்கிறார்.

சட்டநகல் எரிப்புப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு, சிறையில் இருந்த அண்ணாவுக்கும், கழக முன்னோடிகளுக்கும் கிடைத்த ஆறுதல் என்றால், அப்போது நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களில் கழகத்துக்குக் கிடைத்த வெற்றிதான். "அந்த வெற்றியை அறிந்த சிறைத் தோழர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை" என எழுதி இருக்கிறார் அண்ணா. 1964-ஆம் ஆண்டில் ஆம்பூர் நகர் மன்றத்தைக் கைப்பற்றி, கழக வெற்றிகளுக்குக் கட்டியம் கூறியவர் சம்பங்கி.

1961-ஆம் ஆண்டு அண்ணா எழுதிய 'தம்பிக்குக் கடித'ங்களில், 'திராவிடநாடு இலட்சிய நம்பிக்கை கொண்டவர்கள், அதற்காகப் பணியாற்ற உறுதி கொண்டவர்கள், தமிழ்நாடு முழுவதும் கழகக் கூட்டங்கள், கொடி ஏற்று நிகழ்ச்சிகள் என்று சுற்றிச் சுழன்று வருகின்றனர் என இடங்களையும், முன்னோடிகளையும் நினைவிலிருந்து எழுதுகிறேன்' எனப் பட்டியலிட்டிருப்பார். அதில் மறக்காமல், குறிப்பிட்ட பெயர் சம்பங்கி. பேரறிஞர் அண்ணா அளிக்கும் இப்படியான சான்றுகளே, சம்பங்கி அவர்களின் களப்பணிகளைச் சொல்லும்.

## தோல்வியிலும் வெற்றி

'ஆம்பூர்' சம்பங்கியின் தந்தை பெயர் ரங்கசாமி - தாய் அம்மணி அம்மாள். 1925-ஆம் ஆண்டு பிறந்தவர். உயர்நிலைக் கல்வி வரை ஆம்பூரில் பயின்றவர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடக்கக் காலங்களிலேயே உறுப்பினரானவர். அன்றைய ஒருங்கிணைந்த வட ஆற்காடு வேலூர் மாவட்ட முன்னோடிகளுடன் இணைந்து, ஆம்பூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கழகப்பணிகளில் தீவிரமுடன் ஈடுபட்டவர்.

**'என் கண்ணீரைக் கொட்டியும் அந்த சம்பங்கி பூ உதிர்ந்தே விட்டது' என கண்ணீர் வடித்தார். 1950-ஆம் ஆண்டு முதல் கலைஞரின் நெருங்கிய நண்பர். அடுத்த ஆண்டு அவரின் நூற்றாண்டு. எத்தனை ஆண்டுகள் கடந்தாலும், கழகம் ஆம்பூர் சம்பங்கியின் கொள்கையை முழங்கும்!**

1957-ஆம் ஆண்டு கழகம் முதன்முதலில் தேர்தலைச் சந்தித்தபோது ஆம்பூர் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டவர் சம்பங்கி. ஆனால், வெறும் 457 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவினார். கழகம் பெற்ற வாக்கினையும், மூன்றாவது அணியில் நின்றவர் வாங்கிய வாக்கினையும் குறிப்பிட்டு எழுதிய அண்ணா, 'வெற்றி பெற்றவர் வாங்கிய வாக்குகள் 25,562, ஆனால், அவருக்கு எதிராக மக்கள் அளித்த வாக்குகள் மொத்தமாக 39,697. ஆகவே, 'ஆம்பூர் மக்கள் காங்கிரஸ் ஆகாது' என்றுதான் தீர்ப்பு வழங்கி இருக்கின்றனர்' என தம்பிகளுக்குத் தோல்வியிலும் ஒரு ஊக்கத்தை அளித்தார்.

அதன்பின்னர், 1962-ஆம் ஆண்டு தேர்தலில், இன்றைய அணைக்கட்டுத் தொகுதி, அன்று விரிஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியாக இருந்தபோது, கழக வேட்பாளராக களமிறங்கி சட்டமன்ற உறுப்பினரானவர். அதன்மூலம் கழகம் எதிர்க்கட்சியாக அமர்ந்த அவையில் இடம்பிடித்தார் சம்பங்கி. அதே காலகட்டத்தில் விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் கலந்து கொண்டு அண்ணாவுடன் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

1964-ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் வென்று, ஆம்பூர் நகர மன்றத் தலைவர் பொறுப்புக்கு வந்தார். அதன்மூலம் ஒரே நேரத்தில் சட்டமன்ற உறுப்பினராகவும், நகரமன்றத் தலைவராகவும் இரண்டு பதவிகளை வகித்தார்.

1967-ஆம் ஆண்டு ஆம்பூர் தனித் தொகுதியாகவும், விரிஞ்சிபுரம் தொகுதி அணைக்கட்டுத் தொகுதியாகவும் சீரமைக்கப்பட்டபோது, அதற்கேற்ப தலைமைக் கழக முடிவுகளை ஏற்று, கழக வேட்பாளர்களுக்குத் தேர்தல் பணியாற்றியவர். 'ஆம்பூர்' தொகுதியில் கழகம் நிறுத்திய வேட்பாளரை வெற்றி பெறவைத்து அனுப்பியதில், ஆம்பூர் சம்பங்கி கழகக்காரராக வெற்றிபெற்றார்.

## மணம் மாறா மனம்

அண்ணாவுக்குப் பின் கலைஞரின் தலைமையை ஏற்றுக்கொண்டு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்தவர் சம்பங்கி. வட ஆற்காடு மாவட்ட முன்னோடியும், கழக அமைச்சராகவும் இருந்த ப.உ.சண்முகம் அவர்கள் மாற்றுக் கட்சிக்குச் சென்றபோது, வட ஆற்காடு பகுதிகளில் தன்னுடன் பலரையும் அழைத்துச்சென்றார். ஆனால், தனக்கு அரசியல் முன்னோடியாக இருந்தாலும், கழகத்துக்கு எதிரானவர் என்றால், தனக்கும் 'கொள்கை எதிராளி'தான் என ப.உ.சவின் அழைப்பினை மறுத்தவர் சம்பங்கி. அப்போது திருவண்ணாமலையில் நடைபெற்ற கழகக் கூட்டம் ஒன்றில், 'மணம் மாறா சம்பங்கி' என சம்பங்கி அவர்களின் மன உறுதியைப் பாராட்டிப் பேசினார் கலைஞர்.

1977-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் வாணியம்பாடி தொகுதியில் சம்பங்கி அவர்களைப் போட்டியிட வைத்தார் கலைஞர். வெற்றிவாய்ப்பை இழந்தாலும், அவரது மக்கள் பணியில் மாற்றங்கள் இல்லை.

ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைத் தலைவராகவும், கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்றியத்தின் தலைவராகவும் பதவி வகித்த காலத்தில் அவற்றில் திறம்பட செயல்பட்டவர். 1967-இல் கூட்டுறவு வங்கியின் கட்டடத்தை பெரியாரை அழைத்து வந்து திறந்து வைத்தவர்.

1985, ஜூலை மாதம் 8-ஆம் தேதி உடல்நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தினார். அதற்கு முதல்நாள் கலைஞர் நேரில்சென்று பார்த்து வந்திருந்தார். அன்று கலைஞர் வெளியிட்ட இரங்கலில் 'என் கண்ணீரைக் கொட்டியும் அந்த சம்பங்கி பூ உதிர்ந்தே விட்டது' என கண்ணீர் வடித்தார். 1950-ஆம் ஆண்டு முதல் கலைஞரின் நெருங்கிய நண்பர். அடுத்த ஆண்டு அவரின் நூற்றாண்டு. எத்தனை ஆண்டுகள் கடந்தாலும், கழகம் ஆம்பூர் சம்பங்கியின் கொள்கையை முழங்கும்!

**...துடிக்கும்**

## 'வாழ்த்துகள் டி.எம்.கிருஷ்ணா'!

'பார்ப்பனியமயமாக்கப்பட்ட கர்நாடக இசையை எல்லோருக்கு மானதாக ஜனநாயகப்படுத்த வேண்டும்' என்ற 'கலகக் குரலோன்' டி.எம்.கிருஷ்ணா, கிறிஸ்துமஸ் நாளில் சென்னை மியூசிக் அகாடமியில் நடத்திய இசைக் கச்சேரி மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. "கலைப் பன்மைத்துவத்திற்கு எதிரான மார்கழி மாதக் கச்சேரிகளில் இனி பங்கேற்கப் போவதில்லை" என 10 ஆண்டுகளுக்கு முன்பு அறிவித்த டி.எம்.கிருஷ்ணா, ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த குழந்தைகளிடம் கர்நாடக இசையைக் கொண்டுசெல்வதும், வெகுஜன மக்கள் மத்தியில் கச்சேரிகள் நடத்துவதும், சாதியத்துக்கு எதிராக முழங்குவதுமாகத் தன் பணியை அமைத்துக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் தனது மனதை மாற்றிக்கொண்டு, 'இந்த ஆண்டு, சென்னை மார்கழி கச்சேரிகளில் பங்கேற்பேன்' என்று டி.எம்.கிருஷ்ணா அறிவித்தபோது, 'கர்நாடக இசை ரசிகர்கள் இந்நிகழ்ச்சியைப் புறக்கணிப்பார்கள்' என்றெல்லாம் எதிர்மறை விமர்சனங்கள் எழுந்தன. ஆனால், டி.எம்.கிருஷ்ணாவின் கச்சேரி நாளன்று அரங்கம் நிரம்பி, சாலை வரை கூட்டம் திரண்டிருந்தது. மரபுகள் அனைத்தையும் சுட்டுப் பொசுக்கும் விதமாக லுங்கியும், சர்ட்டும் அணிந்தவாறு உள்ளே நுழைந்தார், டி.எம்.கிருஷ்ணா.

வழக்கமான மார்கழி கச்சேரிப் பாடல்களுக்கு மாற்றாக, 'ராமரோ, கிறிஸ்துவோ, அல்லாவோ, எல்லா இறையருளும் ஒன்றுதான்', 'எல்லா மனிதரும் ஒன்றுதான்' என்ற பாடலையும், பெருமாள்முருகன் எழுதிய 'சுதந்திரம் வேண்டும்' பாடலையும் டி.எம்.கிருஷ்ணா பாடியபோது, அரங்கம் அதிர்ந்தது. புறக்கணிப்பார்கள் என்றவர்களையெல்லாம் திக்குமுக்காட வைத்தது, அந்த நிகழ்வு என்னும் அதிர்வு.

அதற்குப்பிறகு, சமூக வலைத்தளங்களையும் சேர்த்து அதிர வைத்துக்கொண்டிருக்கின்றன டி.எம்.கிருஷ்ணாவின் பாடல்கள். "புரட்சி என்பது ஆயுதம் தாங்கியோ, யாரையும் வீழ்த்தியோதான் நடக்க வேண்டுமென்பதில்லை. சில சமயங்களில் மரபுகளை உடைத்தலும் புரட்சிக்கு வித்திடுகிறது. டி.எம்.கிருஷ்ணாவின் இந்தச் செயல்பாடும் அத்தகையதே. கர்நாடக இசையுலகில் சமத்துவத்திற்கான தனியொரு குரலாய் ஓங்கி ஒலிக்கிறது அவரது குரல்" என்பது போன்ற நூற்றுக்கணக்கான பதிவுகள் டி.எம்.கிருஷ்ணாவை வாழ்த்திக் கொண்டிருக்கின்றன. வாழ்த்துகள் டி.எம்.கிருஷ்ணா!

## :ப்ளாஷ்பேக்



### மறக்கமுடியாத தருணம் இது!



கே.சசிகுமார்

தலைமைக் கழகத்தால், 14-வது கழக அமைப்புத் தலைமைக் கழகத் தேர்தல் பார்வையாளராக, நியமிக்கப்பட்ட நான், 27.12.2014 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்திக்க, குடும்பத்தினருடன் கோபாலபுரம் சென்றேன். அப்போதைய கழகப் பொருளாளரும் தற்போதைய கழகத் தலைவருமான அன்புத் தளபதி அவர்கள் "நீங்கள்தானே நான்கு மாவட்டக் கழக அமைப்புத் தேர்தல் நடத்தியது" எனக் கேட்டு என்னைப் பாராட்டினார்கள்.

உடனடியாக, புகைப்படம் எடுப்பவரை வரவழைத்து, எனது குடும்பத்தினருடன் அன்புத் தளபதி அவர்களும் இணைந்து தலைவர் கலைஞர் அவர்களுடன் அடிமட்டத் தொண்டனின் உணர்வுகளைப் புரிந்து புகைப்படம் எடுக்கச் செய்தார். வாழ்வில் மறக்கமுடியாத தருணம் இது.

**– கே.சசிகுமார், மாநிலத் தலைவர், தமிழ்நாடு மின் கழக தொ.மு.ச., சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### 'தமிழிசை கோரிக்கை' பொதுக்கூட்டம்!

1941-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி, 'தமிழ்நாட்டில் தமிழில் பாட வேண்டும்' என்கிற கோரிக்கையை ஆதரித்து, சென்னை, விக்டோரியா அரங்கில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு, நாடக ஆசிரியர் பம்மல் சம்பந்தனார் தலைமை வகித்தார். அவரைத் தலைமை ஏற்குமாறு, எம்.சி.ராஜா முன்மொழிந்தார். 'தாருல் இஸ்லாம்' ஆசிரியர் தாவூத் ஷா வழிமொழிந்தார்.

# திராவிடத்தால் வாழ்கிறோம்

703

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131